4. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

கோவை மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைக்கு ஏற்பட்டுள்ள தீர்வு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கடந்த 19-1-1992 முதல் சுமார் 50 நாட்களாக நடந்து வந்த விசைத்தறி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து ஒரு அறிக்கை வெளியிட விரும்புகிறேன். 8-3-1992, அதாவது நேற்று இரவு 9 மணிக்கு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அலுவலர்கள், பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர், விசைத்தறி உரிமையாளர்கள், மொத்தத் துணி விற்பனையாளர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் ஒப்பந்தம் ஏற்பட்டு வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது. விசைத்தறி உரிமையாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட துணி நெசவிற்கான கூலி போதவில்லை என்ற காரணத்தினால் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த வேலை நிறுத்தத்தினால் கோவை மாவட்டத்தில் சுமார் 1,25,000 விசைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். இந்தப் பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மொத்தத் துணி வியாபாரிகள் ஏற்கனவே கொடுத்து வந்த நெசவுக் கூலியை விட திருப்பூர் ரகத்திற்கு 22 விழுக்காடு கூடுதலாகவும், சோமனூர் ரகத்திற்கு 27 விழுக்காடு கூடுதலாகவும் அளிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். இன்று 9-3-1992 முதல் அனைத்துத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்வார்கள். நிறுத்தப்பட்டிருந்த விசைத் தறிகள் இன்று முதல் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-45

3. சுகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. ச. இராமச்சந்திரன் : நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன்.